# விஜயபாரதம்

25.08.2020 மலர் - 1, இதழ் - 142 VIJAYABHARATHAM DAILY

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று)


## வணக்கம்

## நீங்கள் ஆசிரியரா?
## உங்களுக்கு ஒரு வேண்டுகோள்



நீங்கள் ஒரு பள்ளி, கல்லூரியில் ஆசிரியராக இருக்கலாம். அல்லது முதல்வராக இருக்கலாம். உங்களுக்கு ஒரு கடமை உள்ளது.

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை செயல்ப்படுத்துவதில் ஆசிரியர்கள், முதல்வர்களுக்கு முக்கிய பங்கு உள்ளது.

ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழிக் கல்வி, 6ம் வகுப்பு முதல் தொழில் கல்வி, மும்மொழிக் கல்வி என பல புதிய மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மத்திய அரசு எந்த ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதை எதிர்ப்பதற்கென்றே ஒரு கூட்டம் உள்ளது. புதிய கல்விக்கொள்கையை அமல்படுத்துவதில் அசிரியர்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. உங்கள் ஆலோசனைகளை கல்வித்துறை வேண்டுகிறது.

பள்ளிக் கல்வியில் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக கேள்விப் பதில் முறையில் படிவங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. நீங்கள் தெரிவிக்கிற பயனுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

நேற்று முதல் துவங்கி விட்டது. கடைசிநாள் இம்மாதம் 31ம் தேதி.

உங்கள் ஆசிரிய நண்பர்களுக்கு இந்தச் செய்தியை பகிர வேண்டுகிறோம்.

தாங்கள் பரிந்துரைக்கப்பட வேண்டிய இணையதள முகவரி:
www.innovateindia.mygov.in/nep2020

## வி.எச்.பி உருவாக்கிய பட்டியல் இன பூசாரிகள்

தேச முன்னேற்றம், சாதி பேதமற்ற சமுதாயம் உருவாக பாடுபடும் அமைப்புகளில் ஒன்று விஸ்வ ஹிந்து பரிஷத் (வி.எச்.பி). இந்த அமைப்பு இதுவரை பல்லாயிரம் பட்டியலின மக்களுக்கு பயிற்சி அளித்து கோவில் பூசாரிகளாக்கியுள்ளது. நம் தமிழகத்தில் மட்டும் சுமார் 2000பேர் இதில் பயிற்சி பெற்றுள்ளார்கள். ஆந்திராவில் 5000 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.



## வாரியாருக்கு நேர்ந்த அவமானம்

இன்று கிருபானந்த வாரியாரின் பிறந்தநாள். அவரது பக்தி சொற்பொழிவு எவ்வாறு மறக்க முடியாதோ அதே போன்று அவருக்கு நடந்த அவமானத்தையும் மறக்க முடியாது. நெய்வேலியில் அவரின் தொடர் சொற்பொழிவுகள் நடைபெற்று வந்தன. ஒரு நாள் 'ஊழ்' பற்றி பேசும் போது அண்ணா பற்றி குறிப்பிட்டார். அவ்வளவுதான் தி.கவினரும், தி.மு.கவினரும் அவர் தங்கியிருந்த வீட்டைத் தாக்கினார். அவர் தினசரி வழிபாட்டுக்குறிய முருகன் விக்கிரகமும், பூஜை பொருட்களும் அடித்து நொறுக்கப்பட்டு வீதியில் வீசி எறியப்பட்டன. அவர் பிழைத்ததே பெரிய காரியம்.

முருக பக்தர்களே தேர்தலில் வாக்களிக்கச் செல்லும் முன் இந்த சம்பவங்கள் எல்லாம் நினைவு இருக்கட்டும்.

*தி.மு.க ஹிந்து விரோதி, இது தமிழகத்திலிருந்து துடைத்தெறியப்பட வேண்டும்.*

## சிந்தனை செய் மனமே!



எங்கே விழுந்தாய் என்று
பார்க்காதே!
எங்கே வழுக்கினாய் என்று பார்!
உனது அடுத்த அடி சரியாக
இருக்கும்...!

## கோயில் வாசல் படியில் தொட்டு வணங்குவது ஏன்?

கோயில் வாசலை பெரும்பாலான பக்தர்கள் தொட்டு கும்பிடுவதை பார்த்து இருப்பீர்கள். வாயில் படியை ஏன் தொட்டுக் கும்பிட வேண்டும். இதில் அறிவியல் பூர்வமான ஒரு செயலை நம் முன்னோர்கள் வைத்து இருக்கிறார்கள். பக்தன், கோயில் வாசல்படியை தொட குனியும் போது அது முதலில் அவனிடம் பணிவை ஏற்படுத்துகிறது. அடுத்து அது அவன் உடம்பில் உள்ள சூரிய நாடியை இயக்குகிறது. படிக்கட்டை தொட்ட பிறகு வலது கை விரல்களை நம் நெற்றியில் புருவ மத்தியில் உள்ள ஆக்ஞா சக்கரம் மீது வைத்து அழுத்த வேண்டும். இது நம்மிடம் உள்ள தீய சக்திகளை விரட்டும். அதோடு தெய்வ சன்னதிகளில் இருந்து வரும் அருள் அதிர்வலைகளை மிக எளிதாக நமக்குள்



கிரஹிக்க செய்யும். எனவே அடுத்த தடவை கோயிலுக்கு செல்லும் போது படிகளை வலது கையால் தொட்டு, உங்கள் புருவ மத்தியில் சற்று அழுத்தம் கொடுத்துப் பாருங்கள்.

**நமது ஆன்மிகம் அறிவியல் பூர்வமானது**

## ஹிந்து சரித்திரத்தை மறைத்த காங்கிரஸ்

சுதந்திரம் அடைந்ததும் நமக்கு வாய்த்த கல்வி அமைச்சர்களின் வரிசை இங்கே கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

*மௌலான அபுல் கலாம் ஆஸாத் (1947 - 1958)
*ஹுமாயூன் கபீர் (1963)
*மொஹம்மது கரீம் சாக்லா (1963 - 1966)
*ஃபக்ருதீன் அலி அஹம்மத் (1966 - 1967)
*சையத் நூருல் ஹஸன் (1972 - 1977)

கல்வி அமைச்சகம் முழுமையாக 22 வருடங்கள் நேரிடையாகவே முஸ்லீம் மதத்தைச் சார்ந்தவர்களின் கையில் வேண்டுமென்றே காங்கிரஸ் கட்சியால் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நம் ஹிந்து கலாசாரமும், ஹிந்து அரசர்களின் வெற்றிகளும், சாதனைகளும் முழுமையாக இருட்டடிப்புச் செய்யப்பட்டது. இப்போது புரிகிறதா?நம்முடைய அடுத்துவரும் தலைமுறையினருக்கு நம் சரித்திரம் தெரியவே கூடாது என்பதுதான் அப்போதைய ஆட்சியாளர்களின் நோக்கமாக இருந்தது.

**புதிய கல்விக் கொள்கை - மாற்றம் தருமா?**

# துதிப்போர்க்கு துன்பம் போம் !



**வா**ரியார் சுவாமிகளின் சிறுவயதில் ஒரு காலில் கண்ணாடி குத்தி பெருத்த சேதத்தை உண்டு பண்ணி விட்டது. புண் பழுத்துப் போய் காலையே எடுக்க வேண்டிய நிலை எற்பட்டது. மருத்துவர், காலை எடுத்து விட ரூ500 கேட்டார்.

வாரியார் சுவாமிகள், 'ஒரு காலை எடுப்பதற்கு இந்த மருத்துவருக்கே இவ்வளவு கொடுக்க வேண்டும் என்றால், இரண்டு கால்களை தந்த முருகனுக்கு நான் எவ்வளவு கொடுக்க வேண்டும்!' என்று யோசிக்கலானார். 41 நாள் காலை மாலை இருவேளைகளிலும் சிந்தாதரிப் பேட்டை முருகன் கோயில் பிராகாரத்தில் வலம் வந்தார்.

காலில் புண் இருந்த அடையாளமே இல்லாமல் போனாது.

கிருபானந்த வாரியார், இறைவன் தனக்கு உதவியதை நிரூபித்து உலகுக்கே எடுத்து சொன்னார்.

எல்லாக் கஷ்டத்தையும், மனிதர்கள் மேல் இறக்கி வைக்க முடியாது. அது நம் குடும்பமாக இருந்தாலும் சரி, இல்லை நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும் சரி. ஆனால், ஒருத்தரிடம் நாம் தைரியமாக இறக்கி வைக்கலானம். அந்த நம்பிக்கைக்கு உரியவன் ஆண்டவனே ! பாரம் இறங்கினால் சுமை குறையும், சுமை குறைந்தால் மனம் லேசாகும். மனம் லேசானால் வாழ்வின் ருசி வளரும். எல்லா உயிர்களிலும் இறைவனைக் காண்போம். அவற்றின் மீது அன்பு செய்வதே உண்மையான பக்தி, உண்மையான வழிபாடு.

**இன்று கிருபானந்த் வாரியர் பிறந்த நாள்**